Tamil Murasu, Pg 2, 15 November 2019
Source: Tamil Murasu © Singapore Press Holdings Limited. Permission required for reproduction

# லசால் 12 மாடி கட்டடத்துக்கு $50 மி. நன்கொடை

லசால் கலைக் கல்லூரியின் 12 மாடிக் கட்டடத்துக்கு தனியொரு அமைப்பு ஐம்பது மில்லியன் வெள்ளி நன்கொடை வழங்கியுள்ளது.

2025ஆம் ஆண்டில் புதிய 12 மாடி கட்டடம் கட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் லசால் கலைக் கல்லூரியின் மாணவர்கள் தங்களுடைய வகுப்புகளுக்காக பல்வேறு வளாகங்களுக்குச் செல்ல வேண்டியிருக்காது.

மெக்னல்லி சாலையில் தற்போது செயல்படும் கல்லூரிக்கு அருகே 6,000 சதுர மீட்டர் பரப்பளவில் 12 மாடி வளாகம் கட்டப்படும்.

ரோச்சோர் எம்ஆர்டி நிலையத்துடனும் அது இணைக்கப்படும்.

லசால் கலைக் கல்லூரியில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் அதனைச் சமாளிக்க அண்மைய ஆண்டுகளாக வின்ஸ்டெட் ரோட்டில் உள்ள கலைகளுக்கான வசதிகளை அது குத்தகை அடிப்படையில் பயன்படுத்தி வருகிறது.

அருகில் உள்ள கட்டடங்களையும் அது வகுப்பறைகளாக மாற்றி பயன்படுத்துகிறது.

ஆரம்பத்தில் 1,850 மாணவர்களை இலக்காகக் கொண்டு மெக்னல்லி வளாகம் கட்டப்பட்டது.

ஆனால் தற்போது மாணவர்களின் எண்ணிக்கை 2,700ஐத் தாண்டியுள்ளது. பன்னிரண்டு ஆண்டு களுக்கு முன்பு மெக்னல்லி சாலையில் தனக்கென்று ஒதுக்கப்பட்ட இடத்துக்கு லசால் கல்லூரி இடம் மாறியது.

ஆனால் போதுமான நிதி வசதி இல்லாததால் புதிய வளாகத்தைக் கட்டும் பணி ஒத்தி போடப்பட்டது.

இந்த நிலையில் கடந்த ஆண்டு நீ ஆன் கொங்ஸி, ஐம்பது மில்லியன் வெள்ளி நிதி வழங்க உறுதி தெரிவித்தது.

இது, லசால் கலைக் கல்லூரிக்குக் கிடைத்த மாபெரும் நன்கொடையாகும். இதற்கிடையே நேற்று பேசிய துணைப் பிரதமர் ஹெங் சுவீ கியட், இது, நாட்டின் எதிர்காலத்துக்கு அளிக்கப்பட்ட பங்களிப்பு என்று குறிப்பிட்டார். கலைக் கல்லூரி களுக்கு மில்லியன் கணக்கான வெள்ளியை தியோச்சூ குலவழிச் சங்கம் நன் கொடையாக வழங்குவதை சுட்டிக் காட்டிய அவர், "சிங்கப்பூரிலிருந்து சிங்கப்பூரர் என்ற நிலையை எட்டும் பயணத்தில் இத்தகைய ஒத்துழைப்பு சான்றாக விளங்குகிறது," என்றார். லசால் மெக்னல்லி வளாகத்தில் நேற்று நடைபெற்ற காசோலை வழங்கும் நிகழ்ச்சியில் நிதி அமைச்சருமான திரு ஹெங் பங்கேற்றுப் பேசினார்.



மெக்னல்லி லசால் வளாகத்தில் துணைப் பிரதமர் ஹெங் சுவீ கியட், லசால் கலைக் கல்லூரியின் பீட்டர் சியா, ஸ்டீவ் டிக்சன், நீ ஆன் கொங்ஸியின் உதவி தலைவர் ரிச்சர்ட் லீ, நீ ஆன் கொங்ஸியின் தலைவர் ஜெமி டியோ. **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

## LASALLE's 12-storey building receives $50m donation

A charitable organisation, The Ngee Ann Kongsi, has donated $50 million dollars to fund construction of a 12-storey building for LASALLE College of the Arts. The new building is expected to be completed by the year 2025. New matriculated students then need no longer travel to different campuses or other venues for their classes.

Currently, LASALLE has been leasing spaces at Winstedt Road and nearby buildings to accommodate its growing student population. The initial McNally campus was constructed to accommodate 1,850 students but the population size has since expanded to 2,700.

A 6,000 square metres plot of land next to the College's existing McNally campus had been earmarked for this new building since twelve years ago, when LASALLE first moved to its current campus.

However due to insufficient funds, construction was postponed. With The Ngee Ann Kongsi's landmark gift of $50 million dollars, plans can now move forward.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Limited. Permission required for reproduction

During his speech Deputy Prime Minister and Minister for Finance, Mr Heng Swee Keat, said that this donation is a great contribution to the nation's future and further acknowledged that this collaboration between a Teochew foundation and a Catholic order is “a testament to how far we have come along this journey from Singapore to Singaporean.”

From left to right: President of LASALLE, Professor Steve Dixon; Chairman of LASALLE, Mr Peter Seah; Deputy Prime Minister and Minister of Finance, Mr Heng Swee Keat; President of The Ngee Ann Kongsi, Mr Jamie Teo.